**சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)**
**திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்**
**MCOP . No.172/2025**

**நாள் : 13.03.2026**

**ம.சா.** 2 (மனுதாரர் தரப்பில்) வது நபரின் வாக்குமூலம் (1959)–ம் ஆண்டின் 54 வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.ஆறுமுகம் | மாவட்டம் | : | திருப்பத்தூர் |
| தந்தை / கணவர் பெயர் | : | திரு. சுப்பிரமணி | வயது | : | 48 |
| ஊர் | : | வெத்தலான்வட்டம் | தொழில் | : | டிரைவர் |
| வட்டம் | : | திருப்பத்தூர் | தேசியம் | : | இந்தியன் |

நான் மனுதாரர் தரப்பு 2வது சாட்சி ஆவேன். இந்த வழக்கிற்கான நிரூபண வாக்கமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவை மற்றும் உண்மையானவை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

2ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை. விபத்து சம்பந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். என்னை காவல் துறையினர் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். விபத்தில் இறந்துபோன ரஞ்சித்குமாரின் தகப்பனார் அழைத்ததன்பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் எனறால் சரிதான். இறந்துபோனவர் எனது பக்கத்து ஊர்க்காரர். எனக்கு சொந்தமான டாடா ஏஸ் வாகனத்தில் நாட்றம்பள்ளியில் லோடு இறக்கிவிட்டு பந்தாரப்பள்ளி வழியாக வரும்போது விபத்தை பார்த்தேன். பந்தாரப்பள்ளி பஸ்டாப்புக்கு எதிர்புறத்தில் உள்ள டீ கடைக்கு அருகில் விபத்து நடந்தது. எனக்கு

எதிர்திசையில் ஸ்பிளண்டர் இருசக்கர வாகனத்தை ரஞ்சித்குமார் என்பவர் ஓட்டிவந்தார். மேற்படி இருசக்கர வாகனத்திற்கு பின்னால் வந்த பிக்கப் வாகனமானது இருசக்கர வாகனத்தின்மீது மோதி விபத்து ஏற்படுத்திவிட்டது. நான் எனது ரோட்டை பார்த்துவந்தேன் என்றால் சரியல்ல. நாலாபுறமும் பார்த்துதான் வாகனத்தை ஓட்டிவந்தேன். எனது ரோட்டை அதிக கவனமாக பார்த்தேன் என்றால் சரிதான். அதனால் சைடில் உள்ள ரோட்டை மிதமான கவனத்தில்தான் பார்க்கமுடியும் என்றால் சரிதான். அவ்வாறு மோதியவுடனே சத்தம் கேட்டுத்தான் பார்த்தேன் என்றால் சரியல்ல. எனக்கு எதிர்திசையில் வந்த வாகனங்கள் விபத்திற்குள்ளானதை பார்த்தேன். மேற்படி வாகனங்கள் இரண்டும் 200 அடி தொலைவில் வந்தது. ரஞ்சித்குமார் எனக்கு பழக்கமானவர் என்றால் சரிதான். விபத்திற்கு பின்னிட்டு நான் ரஞ்சித்குமாரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றேனா என்றால் இல்லை. 108 ஆம்புலன்சுக்கு தகவல் சொல்லி வரவழைத்தேன். நான் ரஞ்சித்குமாரின் பெற்றோருக்கு தகவல் சொல்லிவிட்டதால் காவல் நிலையத்தில் தனியாக புகார் எதுவும் கொடுக்கவில்லை. நான் விபத்தை நேரில் பார்க்காததால்தான் காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் ரஞ்சித்குமார் ஹெல்மெட் அணியவில்லை என்றால் சரியல்ல. அந்த ஹெல்மெட் கீழே விழுந்துவிட்டது. சரியான முறையில் ஹெல்மெட் அணிந்திருந்தால் விபத்து நடந்தபோது கீழே விழுவதற்கு வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. வாகனம் அடித்த வேகத்தில் ஹெல்மெட் கீழே விழுந்ததாக சாட்சி கூறுகிறார். ஹெல்மெட்டில் பெல்ட் இருக்கும் என்றால் சரிதான். ஹெல்மெட் பெல்ட்டை சரியான முறையில் போட்டிருந்தால் கீழே விழுந்திருக்காது என்றால் சரியல்ல. எப்படி இருந்தாலும் அடித்த வேகத்தில் கீழே விழுந்துவிட்டது என்று சாட்சி கூறுகிறார். ரஞ்சித்குமார் எனக்கு வேண்டியவர் என்பதால் தவறான முறையில் சாட்சியமளிக்கிறேன் என்றால்ச ரியல்ல. ரஞ்சித்குமார் விபத்து சமயத்தில் ஹெல்மெட் அணிந்திருந்தால் தலைக்காயம் ஏற்பட்டிருக்காது என்றால்ச ரியல்ல. அவர் ஹெல்மெட் அணியவில்லை என்றும், அதனால்தான்

காவல்துறையினவர் ஹெல்மெட் கைப்பற்றியதாக எந்த குறிப்பும் இல்லை என்றால் சரியல்ல. நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றும், இறந்துபோன ரஞ்சித்குமாரின் குடும்பத்திற்கு ஆதரவாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி(FAC),
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.